பிசுமில்லா

கிற்றகுமானிற்றகீம்.

நாகூர் மீராசாகிபுபேரில்

அலங்காரக்கும்மி.

இஃது, 1140

இயலிசைநாடகத்தமிழ்த்தலைமைப்புலமை

நடாத்திய - தொ - வி

மார்க்கண்டமுதிசாமிப்பிள்ளையவர்களால்

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்

பரிசோதித்து.

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பவ ௵.

HARAJAH SERFOGI'S SARASWATH

பிசுமில்லாகி.

நாகூர்மீராசாகிபுபேரில்

அலங்காரக்கும்மி.

இரசூலுல்லாவணக்கம்.

கூறும்நாகூர்குமிக்குமீராசாகிப்
பேறுமாந்தர்பிரியமுடன்கும்மி
மீறும்பத்திவிளங்கப்படிப்பதற்
கோறுமோநபிநாயகம்போற்றுவாம்.

கும்மியடிபெண்கள் கும்மியடிகுரு நபியைக்காண
வேகும்மியடி, நம்மையாளும்நாகூர்மீராசாகிபை நாடி
க்கும்மியடியுங்கடி-அவரைத்தேடிக்கும்மியடியுங்கடி()

அஷ்டதிசைபுகழ்மேவுந்தலங்களி
லதிகமானதோர்நாகூர்பதி
இஷ்டமுள்ளமீராசாகிபின்பாதத்தை
இணங்கிக்கும்மியடியுங்கடி. (௧)

எப்போதுமாந்தர்கள் காலைமாலைதுதி
யெழிலானநபிநாயன்மதி
செப்பமுடன்மீராசாகிபின்பாதத்தைச்
சிறக்கக்கும்மியடியுங்கடி (௨)

சக்கணாபாத்திக்காசெய்வாராமந்த
சாற்றுமீராசாய்ப்புபாதங்கட்கு
முக்குறணிப்பன்னீர்மூன்றபிஷேகமும்
முயற்சியாய்ச்செய்வதைப்பாருங்கடி. (௩)

கோடியுகந்தவஞ்செய்தாலுமித்த
.. சோரியைப்பார்க்கமுடியாது
நாடிமீராசாய்ப்பாதங்கடத்தேற
நவிலக்கும்மியடியுங்கடி. (௬)

அண்டத்களாவியகோரியின்சிகரம்
அறையும்வெள்ளியால்வாசற்காலாம்
சண்டப்பிரசண்டநகப்பத்துமுழக்கம்
சாற்றுமலங்காரம்பாருங்கடி. (௭)

பேரிகைக்கஞ்சாவூர்வோசைசங்கீதமும்
பெரியடமாமுழக்கமுடன்
சாரிவருமீராசாகிபின்பாதத்தைச்
சாற்றிக்கும்மியடியுங்கடி. (௮)

எத்திசையும்பரிமளகெந்தியுட
னெழிலானகொடியூர்கோலம்
பத்தியுடன்வருமீராசாகிபின்
பாதத்தைப்பணிந்துகும்மியடி. (௯)

நாகப்பட்டணங்கான்தொடங்கிபந்த
நவிலும்நாகூர்ஜாசைமட்டும்
வாகுடன்சந்தனக்குடமகிமையை
வகுக்கவேடிக்கைப்பாருங்கடி. (௰)

கப்பல்களைதட்டிப்போனாலுமந்த
கருதுமீராசாகிபுக்கு

கப்பணைக்கட்டுமொக்தர்கள்பத்தியின்
    கழுநுந்திரத்தைப்பாருங்கடி. (கக)
பக்கிரிசேனைபகருங்கோசாவுடன்
    பண்பானசன்னிபாசிக்கூட்டங்கட்கு
சக்கரைபோசனதட்சணைதிட்சதம்
    சாதிக்குமழகைப்பாருங்கடி. (கஉ)
ஏழுநிலையுள்ளமாடமதிலெழி
    லானபுராக்களின்கூட்டங்களும்
வாழுமீராசாய்ப்பினஞ்சுமனாராவின்
    வருத்தசிங்காரத்தைப்பாருங்கடி. (கங)
சொல்லுமலங்காரவாசற்பெருமையும்
    தோற்றுநபிநாயன்மாளிகையும்
புல்லுங்குருக்களின்சாகிபுமார்களை
    புகழ்ந்துகும்மியடியுங்கடி. (கச)
நாகூர்மீராசாய்புதெரிசனம்
    நாடியேமானிடர்செய்வதற்கு
பாருடன்ரெயிலின்சத்தமறையாக
    பாவித்தவழகைப்பாருங்கடி, (கரு)
மலையாளபூபதிராசருடசேனை
    மகிழ்ந்துதரிசனம்செய்வதற்கு
நிலையானகூட்டங்கள்சேனைபகாதிகள்
    நெருங்கிவருவதைப்பாருங்கடி. (கசு

சென்னைபுரிகள்ளிக்கோட்டைபங்காளூரும்
சிறந்தபம்பாய்தன்முதலாய்
கன்னியாபாகவேகளைகடந்துமே
கடுகிவருவதைப்பாருங்கடி. (௧௭)

ஆசிப்பொன்கப்பலதையும்பூக்கப்பலும்
அன்பானவெள்ளியால்கப்பலுடன்
காணிக்கையாகமேலமீராசாகிப்புக்கு
கடுகவனுப்பினார்பாருங்கடி. (௧௮)

வெள்ளிக்கிழமைபனிரண்டுமணிக்கு
விளங்குமுகம்மதுகூட்டங்களும்
பள்ளிவாசல்நின்றுகொத்துபாவோதும்
பகரும்வேதத்தைப்பாருங்கடி. (௧௯)

மூலஸ்தானத்தில்கண்டுமேடங்கலமுன்
முக்கிபபாத்திகாதானேதி
காலக்கடமையாவத்தமுடித்து
கடந்துபோவதைப்பாருங்கடி. (௨௦)

கப்பல்பயணம்போவதற்குமுன்னம்
சழறுமீராசாகிபுக்கு
கப்பணந்தனைபாமரத்தினிலே
கட்டியனுப்புவார்பாருங்கடி. (௨௧)

கப்பல்துறைவழியோடிவரும்போது
கருதும்பட்சிபுராக்களுக்கு

செப்பமுடன்மூட்டையரிசிக்கப்பணம்
    திறமாயனுப்புவார்பாருங்கடி. (௨௨)
பீரங்கிச்சத்தங்களிட்டபின்புமாலின்
    பெருக்கப்பாய்களைதானிறக்கி
தீரமுடன்ரங்கர்கரையோரத்தினில்
    திறமாய்மாட்டுவார்பாருங்கடி. (௨௩)
கூறுமலங்காரவாசற்படிமுன்னம்
    குவிக்குமானிடர்கூட்டங்களும்
தீரமுடன்பண்டங்கொள்ளுமலங்காரம்
    திறமாய்ப்பாவித்தார்பாருங்கடி. (௨௪)
சொல்லுமலங்காரவாசற்படிமாளி
    தோற்றும்ரதகஜதுரகதமும்
வெல்லுங்கவிவாணர்வேதகோஷ்டங்களும்
    விளங்குஞ்சிங்காரம்பாருங்கடி. (௨௫)
எல்லாவினைதீர்க்குமெங்கள்நபிநாய
    னெழிலாமீராசாகிபுக்கு
அல்லாவினருளாலதேங்காய்க்குக்கொம்பு
    அன்பாய்வளர்ந்ததைப்பாருங்கடி. (௨௬)
சிப்பிகள்கட்டியதெப்பக்குளத்தின்முன்
    சிறந்தகம்பம்விளக்குகளும்
ஒப்பமுடன்நான்குபக்கம்படித்துறை
    யோங்குமலங்காரம்பாருங்கடி (௨௭)

நாகூர்மீராசாகிபின்பாவட்டா
    நவிலமுடியாதொருநாளும்
வாகுடன்மணராகப்பலவழிகண்டு
    வருகுமடையாளம்பாருங்கடி. (௨௮)
திங்கட்கிழமைசிறந்தவெள்ளிதனில்
    திறமாய்மானிடர்யாவர்களும்
அங்கமுடனேகாணிக்கைகொண்டுமல்லோ
    அன்பாய்சயனிப்பார்பாருங்கடி. (௨௯)
நாகூர்மீராசாகிபுகோரியில்
    நவிலுமாள்பேர்சேவர்கையில்
பாகுடன்பொன்னால்வெள்ளித்தடிகளும்
    பண்பாயிருப்பதைப்பாருங்கடி. (௩௰)
குத்துவிளக்குகள்செடிவிளக்குகள்
    கூறுமலங்காரவிளக்குடனே
எத்திசைநட்சத்திரங்கள்போலாகவே
    நின்றுயெரிவதைப்பாருங்கடி. (௩௧)
அத்தர்புனுகுசவ்வாதுபரிமள
    மறையுமீராசாகிபுக்கு
நித்தம்சாம்பிராணியும்வத்தியுடன்புகை
    சோராயளிப்பதைப்பாருங்கடி. (௩௨)
நாலுபுரமுமதிலோரமதில்
    நடுவிலெங்கினுமாளிகையாம்

காலோராயிரமண்டபம்போலவே
கட்டியிருப்பதைப்பாருங்கடி. (௧௩)

முன்னேபெரியோர்கள்சொன்னமுறைப்படி
முயலுக்தேவாலயமமைத்தார்
நன்னயமாகவேநாகூர்மீராசாய்பின்
நவிலுமகிமைபாருங்கடி. (௧௪)

அல்லாவுத்தாலாவாசாரமாளியி
னழகுசெம்பொன்கோரிதனில்
பல்லாண்டுயுகம்பாலித்திருக்கும்
பாமதீட்சதம்பாருங்கடி. (௧௫)

முகம்மதுபந்தர்சேக்குமுகிதீன்
முயற்சியாகவேகேட்டபடி
செகமுழுதுமச்சிலடித்து
சிறக்கச்செய்தான்பாருங்கடி. (௧௬)

சீலமுடனாகூர்யாவருமெய்ச்சவே
சிறக்குமீராசாய்ப்புக்கும்மிகளை
வாலன்வேதகிரிமைந்தன்கந்தசாமி
பாடினனென்றேகும்மியடி. (௧௭)

மண்டலந்துதிக்கும்நாகூர்மீரா
சாயிப்பின்தன்பாதமதான்வாழி
தண்டுசேனைகள்நவாப்புபாளையம்
சகலமானபேர்தான்வாழி. (௧௮)

அலங்காரக்கும்மி-முற்றிற்று.